www.Padasalai.Net www.Trb Tnpsc.com

S

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 6×1=6

1) ஒன்றே ________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்

அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

2) மனிதர்கள் தம் ________ தீய வழியில் செல்லவிடாமல் காக்க வேண்டும்

அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை

இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

3) ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ________

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

4) அயோத்திதாசர் நடத்திய இதழ் ________

அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலாணத் தமிழன்

இ) அரைப் பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

5) மக்களின் ஒழுக்கத்தோடு தொடர்புடையது ________

அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

6) அசை ________ வகைப்படும்

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

ஆ) பொருத்துக:- 4×1=4

7) வெண்பா - துள்ளல்ஓசை

8) ஆசிரியப்பா - செப்பலோசை

9) கலிப்பா - தூங்கலோசை

10) வஞ்சிப்பா - அகவலோசை

இ) குறுகிய விடையளி (எவையேனும் ஐந்து வினாக்கள் மட்டும்) 5×2=10

11) யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?

12) மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

13) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?

14) எது பெருமையைத் தரும்?

15) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

16) 'பா' எத்தனை வகைப்படும்? அவை யாவை?

17) இருவகை அசைகளையும் விளக்குக?

ஈ) அடிபிறழாமல் எழுதுக:- 2+3=5

18) நவில்தொறும் ........ எனத் தொடங்கும் குறள்

19) ஒன்றே குலமும் .......

...........நீர் நினைந்து உய்ம்மினே - ஒன்றே குலம் பாடல்

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com

3×2=6

உ) அனைத்து வினாக்களுக்கு விடையளி:-

20) இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக

i) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை

ii) எனக்கும் பால் வேண்டும். எனக்கும் பழம் வேண்டும்

21) கலைச்சொல் எழுதுக: i) Rational - ii) Saint

22) உன்னுடைய பொறுப்புகள் ஏதேனும் இரண்டை எழுதுக.

3×3=9

ஊ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:-

23) மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

24) குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

25) அயோத்திதாசரின் இதழ்ப்பணி குறித்து எழுதுக?

26) பூமி எப்போது பாதையாகும்?

2×5=10

எ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:-

27) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகள் ஐந்தினை எழுதுக?

28) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

29) விபத்தில்லாமல் வாகனப் பயணம் செய்ய வேண்டிய நடைமுறைகள் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

********

www.Padasalai.Net